සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
**Buddhist Civilization I**

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**கவனிக்க :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.
* ஒரு வினாவின் விடைக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

1. வைதீக போதனைகளின்படி ஒவ்வொரு வர்ணங்களுக்கும் உரியதாக ஸ்வதர்மம் வரையறுக்கப்பட்டிருந்தது. இருப்பினும் சில வர்ணத்தவர் தமக்குரியதான ஸ்வதர்மத்தை மீறி செயற்பட்ட வகையினைக் காணக்கூடியதாயிருந்தது. (உதாரணமாக அரசர்கள் நாற்றுப்போடுதலிலும் பிராமணர் விவசாயம் செய்வதிலும் ஈடுபடல் போன்றவை காணக் கிடைக்கின்றன). சில ஸ்வதர்மங்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைஷியர் ஆகிய மூன்று வர்ணத்தவருக்கும் பொதுவானவை. ஆனால் சில ஸ்வதர்மங்கள் பொதுவானவையல்ல. அதன்படி மேற்சொன்ன மூன்று வர்ணத்தவருக்கும் பொதுவான ஸ்வதர்மமாகக் கருதப்படுவது,
   (1) விவசாயம் (2) யாகம் செய்வித்தல் (3) வியாபாரம்
   (4) யாகம் செய்தல் (5) புலனுணர்வுகளில் ஈடுபடாமை

2. ஆபத்து வேளைகளில் அந்தந்த வர்ணத்தவர்கள் பின்பற்றக்கூடிய ஆபத்துதர்மங்கள் பிராமண போதனைகளில் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பிராமண, க்ஷத்திரிய, வைசியர் ஆகிய மூன்று வர்ணத்தவருக்குமான ஆபத்துதர்மம் எனக் கூறப்படத்தக்கது,
   (1) யாகம் செய்வித்தல் (2) விவசாயம் (3) புலனுணர்வுகளில் மூழ்காதிருத்தல்
   (4) ஆட்சி செய்தல் (5) கற்பித்தல்

3. பிரம்மசரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய ஆச்சிரம தர்மங்கள் பிராமண மரபுப் போதனையாகும். இதன் வாயிலாக வாழ்க்கையில் பலவித நோக்கங்களையும் இலக்குகளையும் ஒருவர் நிறைவேற்றக்கூடியதாயிற்று. ஆச்சிரம தர்மங்களுள் கடைசியில் வருவன இரண்டும் ஒருவரின் ஆத்மீக முன்னேற்றத்தினை வலியுறுத்தும். ஒருவரின் ஆத்மீக முன்னேற்றத்தை பௌத்த சமயம் முக்கியப்படுத்துகின்ற போதிலும் பிராமண மரபிற்குரியதான குறிப்பிட்ட போதனைகளை ஆய்வுக்கும் கண்டிப்பிற்குமுட்படுத்துகின்றது. அதற்கு அடிப்படையாவது,
   (1) ஆத்மீக முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதற்கு இதன் மூலம் ஒருவருக்குப் போதிய காலம் கிடைக்காமை.
   (2) ஆத்மீக முன்னேற்றத்தை வேண்டியதொரு காலத்தில் செய்ய இயலாமை.
   (3) ஆத்மீக முன்னேற்றம் வயதுபோன ஒருவரால் நிறைவேற்றப்படுவதிலுள்ள கஷ்டம்
   (4) ஆத்மீக முன்னேற்றமானது சமூகத்திலிருந்து விலகிப் போய் நிறைவேற்றப்பட முடியாதது.
   (5) ஆத்மீக முன்னேற்றமானது தனிமைப்பட்டு போய் ஏற்படுத்தப்படக்கூடியதன்று.

4. பிறப்பையடிப்படையாகக் கொண்டு பிராமண மரபு மனிதகுலத்தை மேலோர், கீழோர் என பிரித்துக் காட்டுகின்றது. பௌத்த சமயம் இந்த வகைப்படுத்தலை மறுத்து நான்கு வர்ணங்களும் சமமானவையென்றும் மனிதகுலம் பலவிதமானதல்ல ஒன்றேயென்றும் காட்டுகின்றது. இருப்பினும் மனிதருள் ஏதோ வேறுபாட்டைக் காண முடிகின்றது என்றும் வலியுறுத்துகின்றது. அத்தகைய வேறுபாட்டிற்குக் காரணமாவது,
   (1) உயிரியல் அடிப்படை (2) வரலாற்றியல் அடிப்படை (3) சமூகவியல் அடிப்படை
   (4) தார்மீக அடிப்படை (5) பொருளியல் அடிப்படை

5. வேதத்துக்கு முந்திய காலத்திலும் வேதத்துக்குப் பிந்திய காலத்திலும் இந்திய சமய வரலாற்றில் பெண்களைப் பற்றிய வேறுபட்ட எண்ணப்பாங்குகள் நிலவின. ஏனைய காலங்களுடன் ஒப்புநோக்கும்போது வேதத்திற்குப் பிந்திய காலத்தில் பெண்கள் இரக்கமின்றி நடத்தப்பட்டமையை வெளிக்காட்டும் செயற்பாடாவது,
   (1) மாத்ரு தெய்வ வழிபாடு (2) பார்வதி தெய்வ வழிபாடு (3) சக்தி பூஜை
   (4) சதி பூஜை (5) ஜகன்மாதா வழிபாடு

[பக். 2 ஐப் பார்க்க

6. வைதிக சமயத்தில் சமூகரீதியிலும் சரி சமயரீதியிலும் சரி பெண்கள் ஆண்களுக்குச் சமமான அந்தஸ்துக்கு உரியவர்களல்லாதவர்களாகவே இருந்தார்கள். பெண் சபலமுடையவளாகவும் தூய்மையற்றவளாகவும் புத்தியற்றவளாகவும் ஆத்மீக விடுதலை சாதனையில் சக்தியற்றவளாகவும் கருதப்பட்டாள். அவ்வாறன்றி பௌத்த சமயத்தில் பெண் பூரண சுதந்திரத்தை அனுபவித்தாள். பிக்குணி, உபாசிகை, தாய், மனைவி என்பவை அவள் பெற்ற சுதந்திரத்திற்கு ஆதாரங்களாகும். புத்தர் காலத்தில் உபசிகையாக விளங்கிய பெண்ணொருத்தியாயிருந்தவர்,
   (1) உப்பல வண்ணா (2) தம்மதின்னா (3) கேமா
   (4) குஜ்ஜுத்தரா (5) படாச்சாரா

7. "பிராணிகளின் கிலேசத்துக்கு காரணமோ நியாயமோ இல்லை. காரணம், நியாமின்றியே பிராணி கிலேசப்படுகின்றது. அவ்வாறே பிராணிகள் தூய்மையடைதற்கும் காரணமோ நியாயமோ கிடையாது. காரணம், நியாயம் இன்றியே பிராணிகள், உயிரினங்கள், பூதங்கள் யாவும் தமது சக்தி, பலம் இன்றியே உலக இயல்புக்கு ஏற்ப ஏழு பிறவிகளுக்குட்பட்டு இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன". இந்த நிலைப்பாட்டினை உணர்த்துவது,
   (1) நியதி வாதம் (2) ஸங்ஷய வாதம் (3) புப்பெகதஹேது வாதம்
   (4) ஸ்யாத் வாதம் (5) அமராவிக்கேப வாதம்

8. ஆறு பிரபல்யமான ஆசார்யர்களுள் சிலர் அகிரியாவாத அபிப்பிராயமுடையவர்கள். இங்கு கூறப்பட்ட த்ருஷ்டிவாதத்தைக் கடுமையாகவே புத்தர் கண்டித்த விதத்தை பௌத்த இலக்கியங்களில் காண முடியும். அதற்கு ஒரு காரணமாவது,
   (1) சமூகத்தில் அகிரியாவாதிகள் அதிகமாயில்லாததனால்
   (2) சமூகத்தில் தீவிரவாதச் செயல் நிகழாமையினால்
   (3) சமூகத்தில் நல்லொழுக்கத்தை அர்த்தமுடையதாக்க முடியாமையினால்
   (4) சமூகத்தில் ஆத்மவாதிகள் அதிகமாயிருப்பதால்
   (5) சமூகத்தில் சாஸ்வதவாதிகள் அதிகமாயிருப்பதால்

9. புத்தர் காலத்து இந்தியாவில் சிரமண (சமண) மரபைச் சேர்ந்த சில சிரமணர்கள் உண்ணுதல், வேறுபட்ட நிலைகளில் நிற்றல், வேறுபட்ட செயல்கள், வேறுபட்ட ஆடைகளை அணிதல், சில மிருக பழக்கங்களைப் பின்பற்றுதல் முதலியவற்றை மேற்கொண்டு தீவிர விரதங்களில் ஈடுபட்டனர். புத்தர் இத்தகைய செயல்முறைகளைக் கண்டித்தார். அதனால் "எல்லாத் தபஸ் செயற்பாடுகளையும் தாழ்வுபடுத்துகிறார்; எல்லாத் தபசிகளையும் குற்றம் கூறுகிறார்; பரிகசிக்கிறார்" என்று சிலர் அவரை குற்றம் சாட்டினர். புத்தர் அவற்றை மறுத்து மதிப்பளித்தது,
   (1) தன்னை வருத்தும், மற்றோரை வருத்தாத விரதமுறைமை
   (2) தன்னை வருத்தாது பிறரை வருத்தும் விரதமுறைமை
   (3) தன்னையும் பிறரையும் வருத்தும் விரதமுறைமை
   (4) பிறரை வருத்தித் தன்னை வருத்தாத விரதமுறைமை
   (5) தன்னையும் பிறரையும் வருத்தாத விரதமுறைமை

10. மாகாண ஆட்சியாளர் பதவி துறந்து தம் அதிகாரத்தைப் பயன்படுத்தி, 16 இராச்சியங்களை அமைத்தமை, பிரிந்து போன சிறிய இராச்சியங்களில் வேறுபட்ட பரிபாலன முறைகளை ஏற்படுத்தியமை என்பன இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு கட்டமாகக் கருதப்படுகின்றது. கி.மு. எட்டாம் நூற்றாண்டளவில் நிகழ்ந்த இவ்வாறானதொரு அரசியல் பரிவர்த்தனத்திற்குக் காரணமான வரலாற்று நிகழ்வாகக் கருதப்படுவது,
   (1) பௌரவ ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி
   (2) இராச்சியங்களுககிடையில் நேர்மையின்மை
   (3) ஏகாதிபத்தியத்தை கட்டியெழுப்புவதில் ஆட்சியாளருக்கிடையில் நிலவிய போட்டி
   (4) பிராமண குலத்தை மிஞ்சி சத்திரிய குலம் மேலோங்கியமை
   (5) இந்தியாவுக்கு சர்வதேச செல்வாக்கு அதிகரித்தமை

11. புத்தர் காலத்து இந்தியாவில் அரசியல் அமைப்பும் செயற்பாடுகளும் ஒழுங்கற்ற நிலையில் இருந்தது. இக்காலத்தில் சில இராச்சியங்கள் அரசனையுடையனவாக இயங்க சில கணதந்திர அரசுகளாக இயங்கின. இவ்வாறு நிலவிய கணதந்திர அரசுகளில் பிரபலமான இராச்சியமாக விளங்கியது,
   (1) மல்ல இராச்சியம் (2) கோசல இராச்சியம் (3) வஜ்ஜி இராச்சியம்
   (4) காசி இராச்சியம் (5) அவந்தி இராச்சியம்

12. சமூகத்தின் தோற்றமானது பல்வேறுபட்ட காரண, காரிய, நிலைப்பாடுகளின்படி படிப்படியாக ஏற்பட்டதொன்றே அன்றி ஈஷ்வர நிர்மாண கருத்தினால் அல்ல என்பதாக பௌத்தம் ஏற்றுக்கொள்கிறது. முதன்முதலான சமூக அமைப்பானது குடும்பம் என்ற அலகின் தோற்றம் என தீகநிகாயாவின் அக்கஞ்ஞ சூத்திரம் காட்டியிருப்பது,
   (1) கணவன் மனைவி போல் சேர்ந்து வாழ்ந்ததன் விளைவு என்பதாக
   (2) சமூகத்தில் களவு அதிகரித்ததன் விளைவு என்பதாக
   (3) ஒன்றாய் இணைந்து அனுபவிப்பதன் விளைவு என்பதாக
   (4) தீவிரமான அபிப்பிராயம் கொண்டதன் விளைவு என்பதாக
   (5) தனிப்பட்ட சொத்துக்களை கவருதலின் விளைவு என்பதாக

[பக். 3 ஐப் பார்க்க

13. பிராணிகளையும் உலகத்தையும் படைத்துக் காக்கும் சக்தியொன்று உள்ளது என்றும் அவ்வாறு ஒரு சக்தி இல்லையென்றும் புத்தர் காலத்து சமய போதனைகளில் இரண்டு விதமான பிரதான சிந்தனை ஊற்றுகள் நிலவின. அத்தகைய சக்தி பற்றி உடன்பாடான நிலைப்பாட்டைக் கொள்வது,
    (1) ஹேது பல வாதத்தை ஏற்பதாகும். (2) அதிச்ச ஸமுப்பன்னவாதத்தை ஏற்பதாகும்.
    (3) புப்பேககததஹேது வாதத்தை ஏற்பதாகும். (4) நியதி வாதத்தை ஏற்பதாகும்.
    (5) ஈஷ்வர நிர்மாண வாதத்தை ஏற்பதாகும்.

14. 'ஸக்வித்திராஜ்ய' என்பது தந்தையிடமிருந்து மகனுக்கு உரிமையாகும் சொத்து அல்ல என சக்கவத்தி ஸீகநாத சூத்திரம் வலியுறுத்துகின்றது. பௌத்த போதனைகளின்படி சக்கரவர்த்தி இராச்சியத் தன்மையென்பது உயர் இலட்சியம் கொண்ட ஆளுமைத் தந்திரமாகும். இதனைத் தாபிப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கையாவது,
    (1) நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை மேலோங்கச் செய்தல்
    (2) அதர்ம செயல்கள் புரியும் குற்றவாளிகளை வேரோடு அழித்தல்
    (3) ஆட்சியாளர் அற ஒழுக்கங்கள் நிறைந்தவராதல்
    (4) புரோகிதர், பிராமணர்களின் புத்திமதிகளைப் பெறுதல்
    (5) அரச சேவையிலீடுபட்டிருப்போருக்கு உரிய ஊதியம் வழங்குதல்

15. "தண்டனையளிப்பதன் மூலம் மட்டும் ஒருவரை குற்றங்களிலிருந்து விடுபடச் செய்ய முடியாது என்று வலியுறுத்திக் கூறும் பௌத்தம் "ஒருவர் குற்றம் புரிவதற்கான காரணத்தைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம் குற்றத்தை விலக்க முடியும்" என்று தெரியப்படுத்தியுள்ளது. பௌத்த போதனைகளுக்கிணங்க ஒருவர் குற்றம் புரிவதற்கான பிரதான காரணமாகக் கொள்ளப்படுவது,
    (1) படித்தல் (2) வறுமை (3) கல்வி
    (4) பணமுடைமை (5) அதிக செல்வம்

16. நீதிக்குக் கட்டுப்படுதல் நாட்டுப் பிரஜைகள் எல்லோரதும் கடமையும் பொறுப்புமாகும். நீதிக்குக் கட்டுப்படுதலால் சமூகத்தில் சமாதானம், இசைவு ஏற்படும். பௌத்தம் நீதிக்குக் கட்டுப்படுதலை பிரதானமானதாகக் கருதுகின்றது. அவ்வாறு சிறப்பிக்கப்படுவதற்கான ஓர் உதாரணம் காணப்படுவது,
    (1) மகோபதேசத்தில் (2) அபரிஹானிய தர்மத்தில் (3) அஷ்டகரு தர்மத்தில்
    (4) அதிகரண சமதர்மத்தில் (5) தஷராஜதர்மத்தில்

17. தானம், இனியவை கூறல், மற்றவர்களுக்கு நன்மை செய்தல், தன்னைப் போல் பிறரையும் கருதுதல் ஆகியன இணைந்து வாகனமொன்றின் சக்கரத்துக் கடையாணி போன்றமையும். சிகாலோவாத சூத்திரம் வலியுறுத்தும் இந்தப் பொறுப்பும் கடமையும் உரியதாவது,
    (1) சமண பிராமணர்களுக்கு (2) கிருஹஸ்தர்களுக்கு (3) ஆசிரியர்களுக்கு
    (4) பெற்றோருக்கு (5) நண்பர்களுக்கு

18. பேச்சடக்கத் (நாவடக்கத்தை) தை பௌத்தம் பெரிதும் சிறப்பானதாகக் கருதுகின்றது. இனிமையான வார்த்தைகளைப் பேசுதல் இருவருக்கும் நன்மையளிக்கும். அது நிர்வாணாவபோத விற்கும் சாதகமானதொன்றென சீரிய அஷ்டாங்கிக (எட்டு வகை) மார்க்கத்தில் 'சம்மாவாசா' எனக் குறிப்பிடப்படுகின்றது. பேச்சடக்கம் நான்கு வகையினதென சச்சவிபங்க சூத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்றாகப் பின்வருவனவற்றிலிருந்து விடுபடுவது குறிப்பிடப்படுகின்றது. அதாவது,
    (1) அபிச்சா (2) வ்யாபாத (3) மிச்சா ஆஜீவ
    (4) பதிக (5) பெஸுஞ்ஞ

19. பிறப்பில் பௌத்தனாகிய சோமதாச குணவானாவார். தனது பொறுப்புகளையும் கடமைகளையும் நன்கு விளங்கிக் கொண்ட சோமதாச தனது பெற்றோரை நன்கு கவனித்தான். தனது ஆசிரியர்களது உபதேசங்களை தலையினால் ஏற்ற சோமதாச ஆசிரியர்களின் கௌரவத்திற்கு இடையூறாகும் எந்தவித காரியங்களையும் செய்யாத பணிவுள்ள மாணவனாவான். எப்போதும் பிக்குகளின் அறிவுரைகளைக் கடைப்பிடிக்கும் சோமதாச முறைப்படியானதொரு பௌத்தனாவான். சோமதாசவின் இத்தகைய வாழ்க்கை முறை பத்து புண்ணிய செயற்பாடுகளுள் அமையும் பின்வருவதாகும்,
    (1) பத்தானுமோதன (2) வெய்யாவச்ச (3) அபச்சாயன
    (4) ஸுதி (5) திட்டீஜுகர்ம

20. காயம் (உடல்), வாக்கு (பேச்சு), மனம் ஆகியன தொடர்பில் செயற்படுவதற்கு முன்பு இதனால் ஏற்படும் விளைவு தனக்கோ பிறருக்கோ அல்லது இரு பகுதியினருக்குமோ தீமையுண்டாக்குமோ என நன்கு சிந்தித்தபின் செயற்படத் தீர்மானிக்க வேண்டும் என பௌத்தம் வலியுறுத்துகின்றது. இந்த தன்னலம், பிறர்நலம் பற்றியதான வாழ்க்கை முறைமை போதிசத்துவ பாதைக்குரியதாகும். போதிசத்துவர் தனது கண்கள், கைகள், தசை, இரத்தம் ஆகியவற்றை மட்டுமன்றி தனது வாழ்வையே புத்த தர்மத்தை நிறைவுசெய்யும் காலப்பகுதியினுள் தியாகம் செய்தார் என ஜாதக கதை இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. பட்டினியாயிருந்த பெண்புலியொன்றுக்கு தனது ஜீவிதத்தையே தானமாகக் கொடுத்தமை இதற்கு காட்டக்கூடிய மிகச் சிறந்த உதாரணமாகும். பௌத்த இலக்கியங்களிலுள்ள இந்தச் செய்திகளின்படி நல்ல, கெட்ட செயல்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஒருவர் கவனிக்க வேண்டியது யாதெனில்,
    (1) தனக்கு ஏதும் இடையூறு ஏற்பட்டாலும் பிறர் நலம் பற்றி எப்போதும் கவனித்தல் வேண்டும்.
    (2) பிறருக்கு இடையூறு ஏற்பட்டாலும் தன்னலத்தைப் பேணுதல் வேண்டும்.
    (3) தன்னலத்தையோ பிறர் நலத்தையோ கவனத்திற் கொள்ளாது சுதந்திரமான சிந்தனைக்கு இடமளித்தல்.
    (4) தன்னலம் போன்று பிறர் நலத்தையும் சமமாகக் கருதுதல்.
    (5) தன்னலத்தினை அடைவதற்காக வேண்டிய வழிகளைப் பின்பற்றல்

[பக். 4 ஐப் பார்க்க

21. சீரிய நான்கு உண்மைகள் போன்ற ஆழ்ந்த தர்ம விடயங்களை க்ஷீணசிரவ (பற்றற்ற) ஒருவர் அனுபவ மூலமாக உணர்ந்து அறிந்து கொள்கிறார். கிருகஸ்தனும் கூட தனது உலகியல் வாழ்க்கையில் அந்த அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். வீட்டு செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் கிருஹஸ்தன் முக்கியமாக ஞானம், சிரத்தை என்பவற்றை அவசியம் வளர்த்தெடுக்க வேண்டுவது மனிதத்துவமாகும். தற்போதைய பெரும்பாலன பௌத்தர்கள் ஓய்வில்லாத கிருஹஸ்த வாழ்க்கையில் ஞான வளர்ச்சிக்கு உதவும் பாவனை (தியானம்) ஈடுபாட்டுச் செயற்பாடுகளிலும் பார்க்க தானம் முதலிய ஆமிஸ புத்த பூஜைகளில் ஈடுபடுகின்றனர். பக்தியோடு கூடிய பாவனையிலும் (தியானம்) பார்க்க பௌதிக புத்த பூஜைகளில் மேலும் மேலும் ஈடுபடுகின்றனர். உண்மையுணர்விற்காக உதவுவது ஞானமேயாகும். பௌத்த மூலாதாரங்களின்படி பௌத்தனொருவன் பின்வரும் வளச்சிக்கு முதலிடம் அளிக்க வேண்டும்
   (1) சிரத்தை
   (2) ஞானம்
   (3) சிரத்தை அதிகமாகவும் ஞானம் குறைவாகவும்
   (4) ஞானம் அதிகமாயும் சிரத்தை குறைவாயும்
   (5) சிரத்தையும் ஞானமும் சமமாக

22. பௌத்தம் கிருஹஸ்தருக்கும் துறவிகளுக்கும் தமது வாழ்க்கையைத் திருப்திகரமாக வாழ்வதற்கு அறிவுரை கூறுகின்றது. கிருஹஸ்தனுக்கும் துறவிக்கும் முடிவான குறிக்கோள் ஒன்றேயாயினும் ஓய்வுவிருப்ப சுகத்தையும் தார்மிக விருப்ப சுகத்தையும் அனுபவிக்கும் ஊடகமும் மார்க்கமும் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகின்றது. இருப்பினும் இந்த வேறுபாடு பௌத்த மூலதர்மத்துக்கு மாறுபட்டதன்று. சுத்தநிபாதபாலியில் இவ்வாறு அறிவுரைக்கப்படுகின்றது. வேறுபட்ட விளையாட்டுக்கள், புலனுணர்வு இன்பங்கள், பஞ்சகாம சுகங்களில் நினைப்பும் விருப்பமுமின்றி அலங்காரங்களிலும் பற்றற்று, உண்மை பேசுபவனாக காண்டாமிருகம் போல் காலத்தைக் கழிக்க வேண்டும். இது வலியுறுத்துவது,
   (1) ஓய்வுநேரத்தைக் கழிக்க வேண்டிய முறைமை
   (2) திருப்தி பற்றிய கோட்பாடு
   (3) உண்மை பேசுதலைப் பழகிக்கொள்ளல்
   (4) அழகியலுணர்வினை அனுபவித்தலுக்கான முறைமை
   (5) ஐம்புலனுணர்வு இன்பங்களிலிருந்து விடுபடுதலுக்கான வழிமுறைகள்

23. சிறிய வியாபாரியாகத் தன் தொழிலை ஆரம்பித்த சிரிதாஸ செய்யக்கூடாத வியாபார முறைமைகளான கங்ஸகூட, மானகூட முதலான தவறான முறைகளைப் பின்பற்றாது மிக விரைவில் முன்னேற்றகரமானதொரு வியாபாரியானான். அவன் பௌத்த போதனைகளில் உள்ள பொருளாதார முகாமைத்துவம் பற்றிய நல்லறிவுடன் உற்சாகம், வீரியம், முயற்சி, திடசித்தம் ஆகியவற்றுடன் செயற்பட்டான். வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஆரம்பத்தில் வங்கிக் கடன் பெறவேண்டியேற்பட்ட போதும் அவன் அவற்றை முறைப்படி நிறைவேற்றி மிகவும் மகிழ்ச்சியடைந்தான். நாளுக்கு நாள் தன் வியாபாரம் முன்னேற்றமடைவதைக் கண்டு சந்தோஷமடைந்த சிரிதாஸ பெற்றோர், மனைவி, மக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளை நிறைவேற்றி மிகவும் சந்தோஷமடைந்தான். மேலும் தார்மிகமே தனது ஆத்மீக, பௌதிக விருத்திக்கு பிரதானமானதென்பதை உணர்ந்து அவர் இன்னும் மகிழ்ந்தார். இந்தப் பந்தியின்படி சிரிதாஸ மிகவும் சந்தோஷப்பட்டது எதனால் எனின்,
   (1) அத்திசுக
   (2) போகசுக
   (3) அனணசுக
   (4) அனவஜ்ஜ சுக
   (5) ஸாமிஸ சுக

24. உற்சாகத்துடன் தொழில் சக்தியைப் பயன்படுத்தி தர்மவழியில் பணத்தையும் செல்வத்தையும் சம்பாதிக்கும் ஒருவர் அதனை சரியான முறையில் நுகர்தல் வேண்டும். இது சம்பந்தமாக பௌத்த மதம் நுகர்வுக்கானதொரு முறைமையைக் காட்டுகின்றது. ஆழ்ந்த அறிவுடன் கூடிய வகையில் செய்யப்படும் அந்த நுகர்வானது காட்டப்பட்டிருக்கும் வகையாவது,
   (1) முடிவின்றி நுகர்தல்
   (2) தர்மவழியில் நுகர்தல்
   (3) ஆபத்து வேளையில் எடுப்பதற்காக சேகரித்து வைத்துவிட்டு நுகர்தல்
   (4) தான் நுகரும்போது பிறருக்கும் அனுபவிக்கக் கொடுத்தல்
   (5) அதிகமாக முதலீட்டுக்காக ஒதுக்கிவிட்டு நுகருதல்

25. ஒருவர் சம்பாதித்த செல்வத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து முகாமைத்துவப்படுத்தும் முறையில் நுகருதல் வேண்டுமென சிகாலோவாத சூத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதற்கிணங்க, முதலாவது பகுதி நுகருதலுக்கும் இரண்டு பகுதிகள் முதலீட்டுக்குமாகும். நான்காவது பகுதியைச் சேமித்து வைத்து ஆபத்து வேளைகளில் பயன்படுத்த எடுத்துக் கொள்ள வேண்டும். பெற்றோரைப் போஷித்தல், சமூகக் கடமைகளை நிறைவேற்றல், புண்ணிய கடமைகளான துறவி, பிராமணருக்குத் தானம் அளித்தல் ஆகியவற்றுக்கு செலவு செய்ய வேண்டுவது சிகாலோவாத சூத்திரத்தில் கூறப்பட்டிருப்பது எவ்வாறெனில்,
   (1) 'ஏகேன போகே புஞ்சேய்ய'
   (2) 'த்விஹி கம்மங் பயோஜயே'
   (3) 'சதுத்தங் ச நிதாபேய்ய'
   (4) மேற்சொன்ன பகுதிகளிலிருந்து சிறிது சிறிது எடுத்து வைத்தல்
   (5) முதாலாவது பகுதியை விடுத்து ஏனைய பகுதிகளிலிருந்தாகும்.

[பக். 5 ஐப் பார்க்க

26. புத்தரிடம் வந்த மார அவரை வாழ்வை முடித்துக் கொள்ளும்படி அழைத்தார் என தீக நிகாயவின் மகா பரிநிப்பான சூத்திரத்தில் குறிப்பிடப்படுகின்றது. அங்கு புத்தர் பிக்கு, பிக்குணிகள், உபாசக, உபாசிகை ஆகிய நான்கு பகுதியினரும் விற்பன்னர்களாகவும் பெரும் சிரத்தையுடையவர்களாகவும் தர்மவான்களாகவும் ஆகாத வரையிலும் அத்துடன் தமக்குரிய ஆசார்யவாதத்தைக் கற்று பரவாதங்களை காரணம் காட்டி மறுப்பதுடன் நியாயவாதிகளாகி தர்மத்தைப் போதிப்பவர்களாக ஆகும் வரையிலும் வாழ்க்கையை முடித்துக் கொள்ள மாட்டேன் என்று மாரனுக்குக் கூறினார். இது புத்தரின் பின்வரும் எந்த பண்பைக் காட்டுகின்றது ?
    (1) கம்பீர பேச்சு
    (2) திறமை
    (3) அஞ்சாமை
    (4) விசேட தலைமைத்துவம்
    (5) சொல்வதைச் செய்யும் பண்பு

27. சாரீபுத்ர இந்த சாசனத்தில் நூறு ஆண்டு ஆயுள் உடைய அறிவு, புத்தி, திடம் ஆகியவற்றால் உயரிய ஞானமுடைய தெளிவான பாவனையுடன் கூடிய நான்கு சீடர்கள் இருப்பார்களானால் அவர்கள் கவனத்தின் நான்கு அடிப்படைகளின் காரணிகள் ஒவ்வொன்றையும் பற்றி என்னிடம் கேள்வி எழுப்பினார்களானால் நான் அந்த ஒவ்வொரு கேள்விகளுக்கும் மறுமொழி கூறுவேன். அவர்கள் அதனை மனதில் பதித்துக் கொள்வர். அதன்மேல் இரண்டாவது கேள்வி எழமாட்டாது. எப்போதுமே அவர்கள் வினா எழுப்பும்போது அவர்களின் எல்லா வினாக்களுமே தீர்க்கப்படும். நூறு வருட ஆயுள் உள்ள நூறாண்டு வாழும் எனது சீடர்கள் நால்வரும் நூறு வருடங்களால் வாழ்வைக் கடந்து விடுவர். சாரீபுத்திரர் நான் படுக்கையில் வைத்து பராமரிக்கப்படினும் எனது ஞானத்திலுள்ள திறமை மாற்றமடையாதே இருக்கும் என புத்தர் தெரிவித்த விதம் மஜ்ஜிம நிகாயவின் மஹாசீகநாத சூத்திரத்தில் காணப்படுகின்றது. இது புத்தரின் எந்தத் தன்மையைச் சிறப்பிக்கின்றது ?
    (1) கேள்விக்குத் தீர்வு கூறுவதிலிருந்த தகைமை
    (2) பேச்சுவன்மை
    (3) கவனத்தின் நான்கு அடிப்படைகள் பற்றிய அறிவு
    (4) பெரும் ஞானம்
    (5) பெரும் தலைமைத்துவம்

28. பிக்குகளே, இதோ எனது உள்ளத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாத ஆவலுள்ள சீடர் ததாகதவிலுள்ள சிறப்புக்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது, உடல் ரீதியானதும் பேச்சு ரீதியானதுமான அடக்கம். உடல் ரீதியானதும் பேச்சு ரீதியானதுமான தீமைகள் உண்டா இல்லையா என்பதை ஆவலுள்ள சீடன் கவனிக்க வேண்டும். மஜ்ஜிம நிகாயவிலுள்ள இங்கு சொல்லப்பட்டதான எச்சரிக்கை எந்த பௌத்தமத உளப்பாங்கைச் சிறப்பிக்கின்றது ?
    (1) கவனிப்பதன் முறைமை
    (2) உடல் ரீதியானதும் பேச்சு ரீதியானதுமான அடக்கம்
    (3) சுதந்திரமான சிந்தனை
    (4) ஆவலுள்ள பிக்குவின் இயல்பு
    (5) புத்தரின் இயல்பான குணப்பண்பு

29. புத்தர் விசாலா நகரில் குடாகார சாலையில் வாழ்ந்தபோது ஒரு நாள் ஏகபுண்டரீக எனும் பெயருடைய வஜ்ஜகொத்த சந்நியாசியின் இருப்பிடத்திற்குச் சென்றார். "சுவாமி வாருங்கள், தங்களது வருகை பெருமைக்குரியது, ஆசனம் தயாராயுள்ளது, அமர்ந்து கொள்ளுங்கள்" என்றிவ்வாறு அன்புடன் புத்தரை வரவேற்று அவர் தானும் தாழ்ந்த ஆசனத்தில் அமர்ந்தார். இவ்வாறு மஜ்ஜிமநிகாயவின் தேவிஜ்ஜவச்சதொத்த சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சிகள் சிறப்பிப்பது,
    (1) புத்தரின் ரம்மியமான இயல்பு
    (2) புத்தரின் எளிமை
    (3) புத்தரின் சமயப் பொறுமை
    (4) புத்தரின் சமூக இணக்கம்
    (5) வச்சகொத்த சந்நியாசி புத்தரின் பக்தர்

30. "தன்னைக் காண வந்தவர்களை பிக்கு, கௌதமர் வாருங்கள், நல்வரவு என்று கூறி வரவேற்றார். காதுக்கினியவகையில் பேசினார். விருப்பமில்லாதவாறு தன் புருவங்களை நெரிக்கவில்லை. உரையாடலில் சிறந்தவர். வந்தவர்களுடன் தான் உரையாடத் தொடங்குபவர். பிக்கு, பிக்குணி, உபாசக, உபாசிகை ஆகிய நான்கு ஆத்மீகம் சார்ந்த பகுதியினரால் கௌதமர் பணியப்பட்டார்; மதிக்கப்பட்டார்; கவனிக்கப்பட்டார்; வணங்கப்பட்டார். பல தெய்வீக மக்களும் கௌதமர் பற்றி இவ்வாறு மகிழ்ந்தனர்". இவ்வாறு சோணதண்ட பிராமணர் தனது பிராமணக் கூட்டத்தினருக்குக் கூறியதாக தீகநிகாயாவின் சோணதண்ட சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. இந்தப் பந்தி முழுவதும் புத்தரின் எதனைச் சிறப்பிக்கின்றது ?
    (1) தன்னிடம் வந்தவர்களை அன்புடன் வரவேற்றமை
    (2) பௌத்த சமூகத்தைச் சார்ந்த நால்வகை அங்கத்தவர்களாலும் அவர் வணங்கப்பட்டமை
    (3) சிறந்த தலைவராயுள்ளமை
    (4) தலைமைத்துவத்தில் மனிதர், தெய்வங்களின் மனதைக் கவரும் தன்மை
    (5) சமகாலத்தவரால் நன்கு மதிக்கப்பட்டமை

[பக். 6 ஐப் பார்க்க

31. சமகால இந்திய சமண பிக்கு சமூகத்தின் செல்வாக்குடனான சிறப்பான நோக்கம், கொள்கைகளையுடைய ஸ்தாபனம் ஒன்றாக பௌத்த பிக்கு ஸ்தாபனத்தைக் கட்டியெழுப்பினர். பௌத்த பிக்குகளின் எழுச்சி, பிக்குகளின் செயற்பாட்டு முறைமை, பௌத்த பிக்குகள் சம்பந்தமான வரையறை போன்றவை இருதரப்புகளிடமும் இடம்பெற்றதாகத் தெரிகின்றது. சில வரையறைகளில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்ப்பது பிக்குகள் தொடர்பிலான வரையறை நியமத்தை மீறியிருந்தது. மகாவக்க பாலியின்படி பிக்குகளை ஆசார்ய உபாத்யாய பதவிகளில் நியமித்திருப்பது அத்தகையதொரு அவசியத்தை முன்னிட்டாகும். அங்கு கூறப்படும் அவசிய தேவையாவது,
   (1) பிக்கு, பிக்குக் கோட்பாட்டினை மீறிச் செயற்படுவதைத் தடுப்பதற்கு
   (2) பொது மக்களின் வேண்டுகோளுக்கு பதிலளிப்பதற்காக
   (3) நல்லொழுக்கமில்லாதவர் பிக்கு அந்தஸ்துக்கு வருவதைத் தடுப்பதற்கு
   (4) பிக்குகளின் வேண்டுகோளின் விளைவு
   (5) பிக்கு அந்தஸ்து ஆரம்பித்து நீண்டகாலம் கழிந்து விட்டமை

32. மழைக்காலத்தில் மழைக்கால வதிவிட வாழ்வைக் கடைப்பிடிக்கும்படி புத்தர் பிக்குகளுக்கு அறிவுறுத்தினார். அதன்படி கண்டு நட்பான, கடும் நட்பு பூண்ட பிக்குகள் பலர் கோசலையிலுள்ள ஒரு மடத்தில் வாழ்ந்தனர். அவர்கள் ஏதாவதொரு வகையில் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் விவாதம் செய்யாது இலாவகமாக வாழ்வோர் என்று எண்ணியவர்களாக ஒருவருடன் ஒருவர் பேசாது இருப்பதாகத் தீர்மானித்தனர். மழைக்காலத்தில் தீர்மானப்படியே வாழ்ந்த இந்த பிக்குகள் மழைக்காலம் முடிந்த பின் புத்தரைச் சந்திப்பதற்குச் சென்றனர். அப்போது புத்தர் அவர்கள் மழைக்காலத்தைக் கழித்த விதத்தைக் கண்டித்து ஏசி மழைக்கால வாசத்தை நிறுத்தும்படி எச்சரித்தார். இதன்பின் செய்யவேண்டிய செயற்பாடுகளையும் கட்டளையிட்டார். அவையாவன:
   (1) பிக்கு ஒருவர் வேறு பிக்கு ஒருவருக்கு அறிவுறுத்துதல்
   (2) தமது குற்றங்களை பிக்குகள் எடுத்துக்கூறலும் அவற்றைத் திருத்திக் கொள்வது பற்றி எடுத்துக்கூறுதலும்
   (3) தம்மைப் பற்றி விமர்சிப்பதற்கு மற்றைய பிக்குகளுக்கு இடமளித்தல்
   (4) மழைக்காலம் முடிவுற்றதும் பிக்குகள் ஒன்றுகூடி தர்மம் பற்றி உரையாடல்
   (5) எல்லா பிக்குகளும் ஒன்றுகூடி பிராதிமோக்ஷம் ஓதுதல்

33. புத்தர் கால பிக்கு, பிக்குணி சமூக அமைப்பின் குறிக்கோளான சிராவக சிராவிகைகளின் ஒழுக்கமுறைமை பற்றிய செய்திகள் பௌத்த மூலாதாரங்களில் உள்ளன. உதாரணமாக கஜங்கலா பிக்குணியைக் கூறலாம். கஜங்கலா வாசிகள் கஜங்கலா பிக்குணியிடம் சென்று சமய சம்பந்தமான சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொண்டனர். பின்னர் அந்த பிக்குணி மேலும் அவற்றைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக புத்தரிடம் செல்லுமாறு அந்த உபாசகர்களுக்கு அறிவுரை கூறினார். புத்தரிடம் சென்ற உபாசகர்களுக்கு அவர் தானும் கஜங்கலா பிக்குணி தீர்வு கூறியவாறே கூறுவேன் என்று அறிவுறுத்தினார். இந்தப் பகுதியினால் சிறப்பிக்கப்படுவது,
   (1) கஜங்கலா பிக்குணியிடம் தர்மம் கேட்கப் பழகிக் கொண்டனர்.
   (2) புத்தரைப் போன்று கோட்பாட்டு சிக்கல்களுக்குத் தீர்வுக்காணும் தகைமை கஜங்கலா பிக்குணிக்கு இருந்தது.
   (3) கஜங்கலா பிக்குணி புத்தரின் மதிப்புக்குப் பாத்திரமானார்.
   (4) கஜங்கலா பிக்குணி தர்ம பிரசாரத்தில் சிறப்பான பணியை மேற்கொண்டார்.
   (5) கஜங்கலா பிக்குணி தர்மபோதனை செய்வதில் வல்லவராவர்.

34. புத்தர் பரிநிர்வாணம் எய்தி மூன்று மாதங்களின் பின்னர் சாசனத்துக்குப் பொறுப்பான மகா தேரர்களின் முதன்மையில் நடைபெற்ற முதலாவது பௌத்த மகாநாட்டில் முக்கியமான தீர்மானங்களும் ஒற்றுமைப்பாடுகளும் கிட்டப்பட்டதாகத் தெரிகின்றது. அவை தேரவாத பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கு சாதகமாயிற்று. இந்த தீர்மானங்களும் ஒற்றுமைப்பாடுகளும் பின்னைய கால மகாநாடுகளுக்கும் அடிப்படையாயிற்று எனச் சில விமர்சகர்கள் கருதுகின்றனர். இருப்பினும் தேரவாத பௌத்தத்தின் நீண்டகால நிலைபேறு சம்பந்தமான மிக முக்கியமான செயற்பாடுகள் இங்கு நிகழ்ந்தன. அதாவது,
   (1) கதாவத்துப்பகரண ஆக்கப்பட்டமை
   (2) முன்பே ஆக்கப்பட்ட விநய விதிகளை மாற்றாதிருக்கவும் இல்லாத விதிகளை உட்படுத்தாதிருக்கவும் தீர்மானித்தமை
   (3) ஆனந்த தேரரை குற்றம் சாட்டியமை
   (4) சுபத்திரரின் கடும் வார்த்தைகளை மறுத்தமை
   (5) கெட்ட நடத்தையுள்ள பிக்குகளை விலக்கியமை

35. பௌத்த தத்துவம், கலாசாரங்கள் மட்டுமன்றி மொழி, இலக்கியம் முதலான பலவித பாடக் களங்கள் தொடர்பிலானவற்றின் கற்றல்-கற்பித்தல், ஆராய்தல் என்பவற்றுக்குப் பெயர்போன புகழ்வாய்ந்த பல்கலைக்கழகங்கள் பல இந்தியாவில் உள்ளன. இந்தப் பல்கலைகழகங்களில் பெரும்பாலானவை மகாயான பௌத்த கற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து மகாயானப் பல்கலைக்கழகங்கள் எனப் பெயர்பெற்று விளங்குகையில் ஒரு பழமையான பௌத்த பல்கலைக்கழகம் மகாயானம் அல்லாத பௌத்த நிகாயாவினைச் சார்ந்த ஸ்தாபனமாக உள்ளது. அதாவது,
   (1) நாலந்தா பல்கலைக்கழகம்
   (2) வலபி பல்கலைக்கழகம்
   (3) ஜகத்தலா பல்கலைக்கழகம்
   (4) விக்கிரமசிலா பல்கலைக்கழகம்
   (5) ஓதந்தபுரி பல்கலைக்கழகம்

[பக். 7 ஐப் பார்க்க

36. தேரவாத பௌத்த மரபுக்கும் அவ்வாறே ஏனைய பௌத்த மரபுகளின் நிலைபேறு, அபிவிருத்தி, விஸ்தாரம் ஆகியவற்றுக்கும் இந்திய பௌத்த ஆட்சியாளர்கள் பெரும் பணியாற்றினர். இந்திய சாசன வரலாற்றில் குஷாணர் காலம் இவற்றுள் முக்கியமானதொரு காலமாகக் கருதப்படலாம். கணிஷ்க மன்னன் புத்த சமயத்தை தழுவிய பின்னர் புத்த சமயத்தைக் காப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் வியாபிக்க வைப்பதற்கும் பெரும் பணியாற்றினான் என மதிக்கப்படுகிறான். பௌத்தத்தின் வளர்ச்சிக்காக இவர் ஆற்றிய முக்கிய செயற்பாடாவது,
   (1) தீய நடத்தையுள்ள பிக்குகளை பதவிகளிலிருந்து அகற்றி சாசனத்தைத் தூய்மைப்படுத்தியமை
   (2) தேரவாத பௌத்தத்தை சர்வதேச ரீதியில் பரப்பியமை
   (3) தேரவாத பௌத்த மகாநாட்டை நடாத்துவதற்கு அனுசரணை அளித்தமை
   (4) சிதறிக் கிடந்த தேரவாத சமயத்தை ஒன்றுசேர்த்தமை
   (5) தர்மத்தை செப்பேடுகளில் எழுதி சேகரித்து வைத்தமை

37. பௌத்த காலத்திற்கு முற்பட்ட கால இலங்கையில் பல்வேறுபட்ட நம்பிக்கைகளும் நடைமுறைகளும் நிலவியதுடன் இந்தியாவில் பிரபலமாயிருந்த சமய ஸ்தாபனங்களின் செயற்பாடுகளும் நிலவியதாக வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில் ஜைன மதம் இந்நாட்டில் நிலவியதற்கான ஆதாரங்களாக சில ஜைன குருமார்களுக்காக பண்டுகாபய மன்னன் இருப்பிடம் அமைத்துக் கொடுத்தமையையும் காட்ட முடியும். அத்தகைய ஜைன மத குருவாயிருப்பவர்,
   (1) வியாத தேவ   (2) ஜுதீந்தர   (3) கும்பண்ட
   (4) மஹேஜ   (5) வைசிரவண

38. முற்காலத்தில் 'பிரஹ்ம தேசம்' என்று அழைக்கப்பட்ட பௌத்த இராச்சியம் தற்போது இவ்வாறு அழைக்கப்படுகின்றது.
   (1) தாய்லாந்து   (2) சீனா   (3) மியன்மார்   (4) கொரியா   (5) யப்பான்

39. தாய் பிக்கு சாசனத்தை 'தம்மயுத்திக்' நிகாய 'மகாநிகாய' என இரண்டாகப் பிரித்து விநய நீதிகளைக் கடுமையாகப் பின்பற்ற வைத்த மன்னன்,
   (1) சூரியவம்ச ராம மன்னன்   (2) அனவரத மன்னன்   (3) தம்மசேத்திய மன்னன்
   (4) மொன்குத் மன்னன்   (5) கேயங்சித்த மன்னன்

40. மிகுந்து அரகத்தரின் தலைமையிலான தூதுக்குழு இலங்கையில் புத்த சமயத்தை அறிமுகப்படுத்தியது. இங்கு அரஹத் மிகுந்தன் பல தர்மபோதனைகளை நிகழ்த்தியதாகவும் அதனால் இந்நாட்டில் பெருமளவு மக்கள் புத்தசமயத்தைத் தழுவியதாகவும் வரலாற்று ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. இந்தப் போதனைகளுக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்ட சூத்திரங்கள் பற்றிய தகவல்களும் தெரிவிக்கப்படுகின்றன. அதன்படி அரஹத் மிகுந்தன் இந்நாட்டிற்கு வந்த முதல் நாட்களில் பல போதனைகளை நிகழ்த்திய சூத்திரங்களாகக் குறிப்பிடுவது,
   (1) சுல்லகத்திபதோபம, ஆசிவிசோபம, மஹாசமய
   (2) சுல்லகத்திபதோபம, அனமதக்கிய, தேவதூத
   (3) சுல்லகத்திபதோபம, தேவதூத, குடதன்ன
   (4) சுல்லகத்திபதோபம, அனமதக்கிய, மகா சுதஸ்ஸன
   (5) சுல்லகத்திபதோபம, அக்கிக்கன்தோப, சாமகாம

41. அரஹத் மிகுந்தனின் அறிவுரையின் பேரில் இந்நாட்டில் தேரவாத பௌத்தம் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான அரச அனுசரணையை தேவநம்பியதீசன் வழங்கினான். தேரவாத பௌதத்தின் கேந்திரஸ்தானமாக இலங்கையில் மகா விகாரையை கட்டியதுடன் தேவநம்பியதீசன் வெஸ்ஸகிரி, இசுருமுனி, தூபாராம முதலான பூஜனை நிலையங்களையும் விகாரைகள் பலவற்றையும் அமைத்தான். அதன்படி சங்கமித்தையின் தலைமையில் இந்நாட்டில் கட்டப்பட்ட முதலாவது ஆராமமாக அறிவிக்கப்படுவது,
   (1) வெஸ்ஸகிரி   (2) பாசினாராமம்   (3) இசுருமுணி
   (4) ஹத்தால்ஹத   (5) தூபாராம

42. இந்தியாவில் பௌத்த நூல்கள் அழிவடைந்தபோது அவற்றைச் சேகரித்து அவற்றைத் தன் நாட்டு மொழியில் மொழிபெயர்த்து காப்பாற்றுவதற்காக பெரும் பணியாற்றிய பௌத்த நாடு எதுவெனில்,
   (1) பர்மா   (2) தாய்லாந்து   (3) யப்பான்   (4) கொரியா   (5) சீனா

43. யப்பானின் ஸென் (Zen) நிகாயாவின் முக்கிய போதனையாவது 'ஸஸென்' (Sazen) என்றழைக்கப்படும் பாவனை (தியானம்) ஆகும். ஸஸென் எனும் தியான நிலைப்பாடாவது அமர்ந்து கொண்டு செய்யப்படும் சூன்ய தியானமாகும். அவ்வாறு தியானம் செய்யும்போது படிப்படியாக அல்லது உடனடியாக புத்தத்துவத்தை அடைய முடியுமென ஸென் (Zen) போதிக்கின்றது. இந்த புத்தத்துவத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுவது,
   (1) பொன்   (2) மத்சுரி   (3) புத்சு   (4) சதொரி   (5) ஜோதோ

44. புத்தசமய செல்வாக்கினால் இந்நாட்டு கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்ற அழகியற் கலைகளும் சிங்கள மொழி இலக்கியங்களும் அபிவிருத்தியடைந்தன. சில எழுத்தாளர்கள் புத்தரின் ஒன்பது குண இயல்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து சுவையான கதை மூலமாக புத்த குணங்களை வர்ணிப்பதற்கு முயன்றுள்ளனர். பொலன்னறுவைக் காலத்தில் வாழ்ந்த குருலுகோமியினால் அமாவதுர எனும் பெயருடைய சிங்கள உரைநடை நூல் ஆக்கப்பட்டது இதன் பயனாலாகும். இந்த நூலில் விபரிக்கப்படுவது புத்தரின்,
   (1) அரகம் குணம்   (2) சுகதோ குணம்
   (3) புரிச தம்மசாரதி குணம்   (4) சத்தா தெவ மனுஸ்ஸானம் குணம்
   (5) பகவா குணம்

[பக். 8 ஐப் பார்க்க

45. மதுரை புத்த சிலையில் காணப்படும் சிறப்பியல்பு என்று காட்டக் கூடியது,
   (1) சாக்கிய சிங்க நிலை, திறந்த கண், இயல்பான முடி
   (2) சாக்கிய சிங்க நிலை, திறந்த கண், சுருண்ட முடி
   (3) சாக்கிய சிங்க நிலை, அரைவாசி மூடிய கண், இயல்பான முடி
   (4) சாக்கிய சிங்க நிலை, அரைவாசி மூடிய கண், சுருண்ட முடி
   (5) சாக்கிய சிங்க நிலை, புன்சிரிப்பு, இயல்பான முடி

46. பௌத்த கட்டடக் கலைஞர் புனிதமானவற்றுக்கான கட்டடங்களை விசேடமாகக் கட்டினார்கள் என அறியக் கிடக்கின்றது. 'இந்தியாவின் சைத்திய சாலை' எனும் பெயரிலான பிரசித்தமான கட்டடக் கலைக்குப் பதிலாக 'தூபகர' அல்லது 'சேத்தியகர'வையும் அரச மரத்திற்குப் பதிலாக 'போதிகர'வையும் அமைத்தனர். ஆரம்ப காலத்தில் புத்தர் சிலை அரச மரத்தின் கீழோ அல்லது சைத்தியத்திலோ வைக்கப்பட்டது. பிற்காலத்தில் அதற்காக 'படிமாகர' எனும் பெயரில் விசேடமானதொரு கட்டடத்தைக் கட்டினர். இதற்கு மேலதிகமாக உபோசதகர, பதானகர என்பது முதலான பெயர்கள் கொண்ட பௌத்த சமய கட்டடங்கள் விசேடமாகக் கட்டப்பட்டன என்பதாகவும் காணக்கிடக்கின்றது. இவற்றுள் 'கெடிகே' என்றழைக்கப்படும் பௌத்த கட்டடம் விசேடிப்பது,
   (1) போதிகரவாகும்.
   (2) பதானகரவாகும்.
   (3) படிமாகரவாகும்.
   (4) உபோசதகரவாகும்.
   (5) சேதியகரவாகும்.

47. புராதன இலங்கையின் பௌத்த அரசர்களின் பிரதான ஆலோசகர்களாக இருந்த புத்த பிக்குகள் பலரின் பெயர்களை மூலாதாரங்களிலிருந்து தேடிப் பெற முடியும். தேவநம்பியதீச மன்னனிலிருந்து தொடங்கும் இலங்கையின் பௌத்த அரச வம்சத்தினர் பலர் இவ்வாறு பௌத்த பிக்குகளைப் பிரதான ஆலோசகர்களாகக் கொண்டு செயற்பட்டனர். அதன்படி சத்தாதிஸ்ஸ அரசனின் அறிவுரை ஆலோசனைக்குப் பொறுப்பாயிருந்தவர்,
   (1) வண. குப்பிக்கல
   (2) வண. மகாசும்ம
   (3) வண. கால புத்தரக்கித
   (4) வண. சங்கமித்ர
   (5) வண. கொஹொன் திஸ்ஸ

48. கண்டி இராச்சிய காலத்தைச் சேர்ந்த தெகல்தொருவ விகாரை ஓவியங்களும் சமகாலத்து பதினெட்டாம் நூற்றாண்டில் வரையப்பட்ட வேறு விகாரைகளில் காணக்கிடைக்கும் ஓவியங்களும் மரபுரீதியிலும் தொழினுட்ப ரீதியிலும் பொலன்னறுவை ஓவியங்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. அத்தகையதொரு வேறுபாடாகக் காணக்கூடியதாயிருப்பது,
   (1) புத்தி கோசர (புத்திக்கூர்மையைக் காட்டுவது)
   (2) தாத்விக (தத்ரூபமான இயல்பு)
   (3) அக்ஷிகோசர (கண்ணைக் கவருவது)
   (4) பர்யாலோகய (எங்கும் ஒளிபரப்புவது)
   (5) அவகாச (அதிக இடைவெளிகளைக் கொண்டது)

49. மிகப் பழைய காலத்தில் மட்டுமன்றி இப்போதும் கூட இலங்கைச் சமூகத்தில் கலை ரசனைக்காக ஆக்கப்பட்ட பல உருவாக்கங்களில் பௌத்த செல்வாக்கைக் காணமுடிகின்றது. பௌத்த கருப்பொருளை (Theme) மூலமாகக் கொண்ட கீதம், நாடகம் மட்டுமன்றி திரைப்படங்களும் தற்கால சமூகத்தில் மிகவும் பிரபல்யம் பெறுகின்றன. இதற்கு நல்லதோர் உதாரணம் பேராசிரியர் சரத்சந்திரரின் படைப்புகளாகும். சரத்சந்திரரின் 'மனமே' நாடகம் படைக்கப்பட்டது பௌத்த ஜாதகக் கதையொன்றை அடியொற்றியேயாகும். அதற்குக் கதைப்பொருளான ஜாதகக் கதையாவது,
   (1) சேரிவாணிஜ ஜாதகம்
   (2) உம்மக்க ஜாதகம்
   (3) லோமஹங்ச ஜாதகம்
   (4) குச ஜாதகம்
   (5) சுல்லதனுத்தர ஜாதகம்

50. திவ்யாதான, மூல சர்வாஸ்திவாதீ விநய, க்ஷுத்ரகவஸ்து, கிரியா சங்கிரஹ, விஷ்ணு தர்மோத்தர புராணம் முதலான மூலாதாரங்களில் ஸ்தூப அம்சங்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. இந்திய மூலப் படைப்பான பௌத்த ஸ்தூபத்திற்கு பலவித அம்சங்கள் சேர்க்கப்பட்டது அதன் எழுச்சியையொட்டியாகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரையும் அதற்குப் பின்னும் இலங்கையின் ஸ்தூபங்களும் ஸ்தூப அம்சங்களும் உபாம்சங்களும் சேர்ந்து வளர்ச்சி பெற்றிருந்தது. இவ்வாறு வளர்ச்சியடைந்த ஸ்தூபங்களை அடுத்து அமைக்கப்பட்டிருந்த 'வேதீ'யானது இவ்வாறு அழைக்கப்பட்டது.
   (1) குச்சவேதீ
   (2) பாதவேதீ
   (3) ஹத்திவேதீ
   (4) முத்த வேதீ
   (5) அதோவேதீ

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஆகஸ்ட்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி I இல் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

(இப்பகுதியில் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளிக்குக)

1. (i) புத்தபிரானின் 'த்ரிவித்யா ஞானம்' பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுக.
   (ii) புத்த பிரானின் தனித்துவமான தலைமைத்துவம் வெளிப்படுத்தப்பட்ட **இரண்டு** சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.
   (iii) தனது சிராவக, சிராவிகைகளின் திறமையைத் தெரியப்படுத்துவதற்காக பொறுப்புகளை வழங்கியது தொடர்பிலான புத்தரின் திறமையினை **இரண்டு** உதாரணங்கள் மூலம் விளக்குக.
   (iv) புத்தரின் சிறப்பியல்பான 'யதாவாதீ ததாகாரீ யதாகாரீ ததா வாதீ' என்னும் குணப்பண்பினை உதாரணங்கள் மூலம் விளக்குக.
   (v) தாமரையை ஒத்ததான புத்தரின் வாழ்க்கைத் தத்துவத்தை நவீன சமூகத்திற்கு ஏற்றதாக்கும் அவசியத்தை எடுத்துக் காட்டுக.

2. (i) செல்வத்தை சம்பாதித்தல், அதற்கான சிரமம் ஆகிய இரண்டிற்குமிடையிலான தொடர்பினை பௌத்த போதனைக்கமைவாகச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.
   (ii) 'சமஜீவிகதா' என்றால் என்ன என்பதை மூலாதாரங்களின் அடிப்படையில் தெரியப்படுத்துக.
   (iii) மது அருந்துதலினாலுண்டாகும் அபாயங்களை விளக்குக.
   (iv) கணவன்-மனைவியின் கடமைகள், பொறுப்புகள் ஆகியவற்றை சிகாலோவாத சூத்திரத்திற்கமைவாக எடுத்துக் காட்டுக.
   (v) சூழல் நல நேயம் புத்தசமயத்தில் எவ்வளவு தூரம் மதிக்கப்படுகிறது என்பதனைத் தெளிவுபடுத்துக.

3. (i) புத்தர் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் பௌத்த மதம் பரவியிருந்த இடங்கள் பற்றித் தெரியப்படுத்துக.
   (ii) முதலாவது பௌத்த மகாசபை நடைபெறுவதற்கு ஏதுவாயிருந்த காரணிகளைத் தொகுத்துக் கூறுக.
   (iii) தர்ம, விநயத்தைப் பாதுகாப்பதற்கு முதலாவது பௌத்த மகாசபையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை என எடுத்துக் கூறுக.
   (iv) புராதன இந்திய சர்வகலாசாலைகளுள் வலகி சர்வகலாசாலைக்குரிய சிறப்பிடத்தினை விளக்குக.
   (v) அசோக தர்மத்தில் பௌத்த சமயத்தின் செல்வாக்கிருந்தமைக்கான **நான்கு** ஆதாரங்களைத் தருக.

## பகுதி II

(இப்பகுதியிலிருந்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்குக)

4. (i) 'ஈஷ்வர நிர்மாணவாதம்' என்பது யாது என்பதை விளக்கி, நால்வர்ணக் கோட்பாட்டின் தோற்றம் பற்றிய பிராமணியக் கொள்கையினையும் விளக்குக.
   (ii) "பிறப்பின் அடிப்படையில் மனிதகுலம் உயர்ந்தது, தாழ்ந்தது என வேறுபாட்டிற்குட்படுத்தப்படலாகாது". பௌத்த ஆதாரங்களினடிப்படையில் நிரூபிக்குக.
   (iii) பெண்ணினத்தைப் பற்றி பிராமண சமூகத்தினரிடையே நிலவிய எண்ணப்பாங்கினை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
   (iv) பௌத்தத்தில் தாய்மைக்கு அளிக்கப்பட்ட கௌரவத்தினை காரணங்களுடன் எடுத்துக் காட்டுக.

[பக். 2 ஐப் பார்க்க

5. (i) பூரண கஸ்ஸபரின் 'அகிரியாவாதம்' பற்றி போதிய விபரங்களைத் தருக.

   (ii) அகிரியாவாதக் கருத்துக்கள் பௌத்த போதனைகளில் மறுக்கப்படும் வகையினைப் பரிசீலிக்குக.

   (iii) நல்ல, கெட்ட செயற்பாடுகள் பற்றித் தீர்மானிக்கையில் சேதனா, விபாக ஆகியன பற்றிய பௌத்த மத அறிவுடைநிலையினை விளக்குக.

   (iv) உண்மையுணர்வு பற்றிய ஞானம் ஒருவரின் தனிப்பட்ட முன்னேற்றத்திற்குதவும் வகையினைத் தெளிவுபடுத்துக.

6. (i) இசைவான சமூகமொன்றை உருவாக்க பௌத்த அரசியல் மூலதர்மம் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.

   (ii) பொது வளங்கள் முகாமைத்துவத்தில் பௌத்த போதனைகளின் இன்றைய காலகட்டதிற்கான முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுக.

   (iii) பௌத்த துறவிகளுக்கும் ஏனைய இந்திய துறவிகளுக்குமிடையிலான தகைமை வேறுபாட்டினைப் பரிசீலிக்குக.

   (iv) மழைக்கால வாசத்தினை நிறைவுசெய்வது எவ்வகையில் பிக்குவினது பழக்கக் கட்டுப்பாட்டிற்கு இட்டுச்செல்லும் என்பதனை விளக்குக.

7. (i) முன்பு நிலவிய பர்மிய-இலங்கை பௌத்த தொடர்பு இரு நாடுகளுக்குமான கலாசார வளர்ச்சிக்கு உதவிய வகையினை விளக்குக.

   (ii) யப்பானிய பௌத்த விழக்கள் யப்பானிய மக்களிடையே பௌத்த மத உணர்வினை ஏற்படுத்துவதற்கு உதவிய வகையினைப் பரிசீலிக்குக.

   (iii) இலங்கையரது சமூக நடவடிக்கைகள் பௌத்த மத செல்வாக்கினால் உணர்வூட்டப்பட்ட வகையினை எடுத்துக் காட்டுக.

   (iv) புராதன இலங்கையில் அரசுக்கும் பௌத்த மதத்துக்குமிடையில் நிலவிய அன்னியோன்ய தொடர்பினை வரலாற்று அடிப்படையில் பரிசீலிக்குக.

8. (i) இலங்கைச் சமூகத்தினுள் நல்லொழுக்க முறைமையை உருவாக்கும் ஊடகமாக விகாரை ஓவியக்கலை பயன்பட்ட வகையினை எடுத்துக் காட்டுக.

   (ii) இலங்கை பௌத்த சிலைகளில் வெளிப்படையாகக் காணக் கிடைக்கும் முத்திரை லட்சணங்களை (நிலைகளை) உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுக.

   (iii) சாஞ்சி ஸ்தூபங்கள் சம்பந்தப்பட்ட வகையில் இலங்கை ஸ்தூபங்களில் காணக் கிடைக்கும் விசேடத்தன்மை யாது என்பதை எடுத்துக் கூறுக.

   (iv) மக்களின் உணர்வினுள் பௌத்த போதனைகளைத் தெரிவிக்கும் வகையில் இலங்கை பௌத்த கீத இலக்கியத்தின் பங்களிப்பினை மதிப்பிடுக.

The National e-learning Portal - The General Education

* * *